[2015 பிப்ரவரி 23

52—

சொந்தக் கட்டடம்

***37513—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு கால்நடை பராமாரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, பிள்ளையார்நத்தத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசினால் மட்டுமல்ல, தன்னுடைய பிறந்தநாள் மூலமாகவும் மக்களுக்கு வாரி, வாரி வழங்கிக் கொண்டிருக்கின்ற மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, பிள்ளையார்நத்தத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா என்று கேட்டிருக்கின்றார்கள்.

ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டத்தில் செயல்படுகின்ற பிள்ளையார்நத்தம் அரசு கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டுவதற்கு பிள்ளையார்நத்தம் கிராமத்தில் மேய்ச்சல் தரை புறம்போக்கு நிலமோ அல்லது நத்தம் புறம்போக்கு நிலமோ இல்லை என்பதால், அங்கே தனியார் ஒருவர் சர்வே எண் 557-ல் அரசின் திட்டங்களுக்காக வழங்கியுள்ள நிலத்தில் கால்நடை மருத்துவமனைக் கட்டடம் கட்ட மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

திரு. வை. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, பிள்ளையார்நத்தம் பகுதி, மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அமைந்திருக்கின்றது. அந்தப் பகுதியில் விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் அதிகளவில் உள்ளனர். கால்நடைகளின் எண்ணிக்கையும் அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு இருக்கின்ற காரணத்தினால்தான் அங்கே கால்நடை மருத்துவமனை தொடங்கப்பட்டுள்ளது. ஆனால், எந்தவித அடிப்படை வசதியும் இல்லாமல் இயங்கி வருகின்றது. இன்றைக்கு அரசின் சார்பில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ஒரு தனியாரால் எழுதிக் கொடுக்கப்பட்ட இடம் அந்தப் பகுதியிலே இருக்கின்ற காரணத்தினால், அந்த இடத்தை கால்நடை பராமரிப்புத் துறை பெற்று, அந்த இடத்திலேயே சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ஸ்ரீவில்லிபுத்தூரில் அமைந்திருக்கின்ற கால்நடை மருத்துவமனை எந்தவிதமான அடிப்படை வசதியும் இல்லாமல் இருக்கின்றது. எனவே, ஸ்ரீவில்லிபுத்தூரில் அமைந்திருக்கின்ற மைய கால்நடை மருத்துவமனையை அனைத்து வசதிகளுடன்கூடிய மருத்துவமனையாகத் தரம் உயர்த்திடவும், சுந்தரபாண்டியத்தில் இருக்கின்ற கிளை கால்நடை மையத்தைத் தரம் உயர்த்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

வடக்கு குப்பணாபுரம், கொண்டையம்பட்டி, சுரைக்காய்பட்டி போன்ற பகுதிகளில் இருக்கின்ற மக்கள், கால்நடைகளுக்கு வைத்தியம் செய்ய வேண்டுமெனில் 15 கி.மீ. தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கே கால்நடைகளும் அதிகளவில் இருக்கின்ற காரணத்தால் வடக்கு குப்பணாபுரத்தை மையமாகக் கொண்டு ஒரு கால்நடைக் கிளை நிலையமும், கொண்டையம்பட்டி, சுரைக்காய்பட்டி பகுதிகளிலுள்ள கால்நடைகளுக்காக, கொண்டையம்பட்டியை மையமாகக் கொண்டு ஒரு கால்நடைக் கிளை நிலையமும் அமைத்துத் தந்து, அந்தப் பகுதிகளில் இருக்கின்ற விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போரின் நலன்களைப் பாதுகாத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற சர்வே எண் 557-ல் இருக்கின்ற நிலத்திலே கால்நடை மருத்துவமனை அமைக்க மாவட்ட ஆட்சித்

தலைவரிடத்தில் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் பிரேரணை சமர்ப்பித்துள்ளார். மாவட்ட ஆட்சியரின் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், அந்த இடத்திலேயே கால்நடை மருத்துவமனைக் கட்டடம் கட்ட மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அத்துணை பகுதிகளும் துறையின் வாயிலாக ஆய்வு செய்யப்பட்டு, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அங்கே கிளை நிலையம் அமைக்க பரிசிலனை செய்யும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது வெயில் காலம் ஆரம்பிக்கவிருக்கின்றது. கடந்த ஆண்டு என்னுடைய ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் கால்நடைகளைப் பல்வேறு நோய்கள் தாக்கியதால், பல கால்நடைகள் உயிரிழக்க நேரிட்டன. எனவே, ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதி முழுவதும் உள்ள கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைத் தடுக்கின்ற முறையில் இந்த ஆண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பதற்கு அரசின்மூலம் திட்டம் ஏதேனும் வகுக்கப்பட்டுள்ளதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருடாவருடம் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் ஒரு கோடி கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தருகிறார்கள். கடந்த ஆண்டில் கோமாரி நோயினால் எந்த ஒரு கால்நடையும் பாதிக்கப்படவில்லை. வருகின்ற நிதியாண்டிலும் ஒரு கோடி*

கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி குறித்த காலத்தில் போடப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியத்தில் கல்லூத்து பஞ்சாயத்திற்குட்பட்ட கல்யாணிப்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டுமென்று பல வருடங்களாகக் கேட்டு வருகிறார்கள். அதுமட்டுமல்ல, அது மலைப் பகுதி. இது அதிகமான கால்நடைகள் உள்ள பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அதை அமைத்துத் தர முன்வருவார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கேள்வியின்போது, தடுப்பூசி போடப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள் கேட்டார்கள். கேரள மாநிலத்தில் எல்லாம் அந்தத் தடுப்பூசிக்குக் குறிப்பிட்ட அளவு பணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால், தமிழகத்தில் மக்களின் முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இலவசமாக அந்தத் தடுப்பூசியைப் போட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள் வைத்த கோரிக்கை சம்பந்தமாக துறையின் மூலமாக ஆய்வு செய்து, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட சேரங்கோடு ஊராட்சி, தமிழகத்திலே பெரிய ஊராட்சியாகும்.

அதேபோல, மக்கள்தொகை பரப்பளவிலும் பெரிய ஊராட்சியாகும். இந்த ஊராட்சிக்கென்று கொளப்பள்ளியில் ஒரு கால்நடை மருத்துவமனை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இதற்கு சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வரையில் எந்த ஓர் அரசும் செய்யாத அளவிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 2011-2012 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 497 புதிய மருந்தகங்களைக் கட்டியுள்ளது. அதேபோல், 2012-2013 ஆம் ஆண்டில் 185 கட்டடங்கள்; மொத்தத்தில் ஏறக்குறைய 680 கட்டடங்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான் கட்டியுள்ளது. இது வரையில் எந்த ஓர் அரசின் சார்பிலும் இந்த அளவிற்குக் கட்டப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற அந்த இடத்திற்கு நம்முடைய கால்நடை பராமரிப்புத் துறையின் துணை இயக்குநர் அவர்களை அனுப்பி, அதனை ஆய்வு செய்து, அந்த இடத்திலே மருத்துவமனைக்குக் கட்டடம் கட்ட மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பரிசிலனை செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

53—

குறைந்த விலை துணி ரகங்கள்

***46751—திரு. ஆர். ராமமூர்த்தி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—